
[illegible]
[illegible]


G

சிவமயம்.

குருசுவாமி துணை.







குருசுவாமி கோட்டூர்

புன்னை முத்துக்குருசுவாமி

அவர்களின்

பேரின்ப முத்திப் பாடல்கள்.

இவை

மேற்படி குருசுவாமியவர்களின் புதல்வியாகிய

குருவம்மாளால்

பாடப்பெற்று

மதுரை:

மீனலோசனி அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பெற்றன.

1926

விலை அணா 2.

சிவமயம்.



குருசுவாமி கோட்டூர்

புன்னை முத்துக்குருசுவாமி

அவர்களின்

பேரின்ப முத்திப் பாடல்கள்.

இவை

மேற்படி குருசுவாமியவர்களின் புதல்வியாகிய

குருவம்மாளால்

பாடப்பெற்று

மதுரை:

மீனலோசனி அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பெற்றன.

1926

விலை அணா 2

முகவுரை.

எந்நாட்டினுஞ் சிறந்த நன்னாடாகிய பாண்டிவளநாட்டின்கண்ணுள்ள இராமநாதபுரம்ஜில்லா சாத்தூர்த்தாலூகா எட்டயபுரம்ஜமீன் கோவில்பட்டி பிர்க்கா துலுக்கபட்டி ரயில்வே ஸ்டேஷனுக்குச் சமீபம் சுமார் ஐந்து மைல் தூரத்திலுள்ள கோட்டூரில் ஏறக்குறைய சுமார் (100) நூறு வருஷங்களுக்குமுன் சைவ வணிக குலத்திலுதித்து சர்வசித்திகளிலும் பிரபலம் வாய்ந்து நைட்டிக பிரம்மசாரியாகிய சடைச்சாமி என்னும் குருசுவாமியாகிய பெரியார், பிளவை புண் கண்ணோவை முதலிய சகல நோய்களுக்கும் குளைப்பார்வை பார்த்தல், வீபூதி மந்திரித்துப் போடுதல், எண்ணெய் மிளகு முதலியவை மந்திரித்துக் கொடுத்தல், பிள்ளைப்பேறு வேண்டினவர்களுக்கு மஞ்சட்கிழங்கு மந்திரித்துக் கொடுத்தல் முதலிய அரும் பெரும் செயல்களைச் செய்து, அளவற்ற ஜனங்களுக்குப் பிணிகளையும் துன்பங்களையும் போக்கி ஆனந்த சாகரத்திலாழ்த்திவந்த முறைப்படி, அவர்கள் சகோதரரின் புதல்வராகிய நாகநாத குருசுவாமியவர்கள் இருந்து நடத்தியபின், அவர்களின் புதல்வராகிய புன்னைமுத்துக்குருசுவாமி யவர்கள் மேற்கண்ட அற்புத கைங்கரியத்தை ஐம்பத்தொரு வயதுவரை மிக்க புகழோங்க நடத்திவந்து, கலியுகம் 5026-வது குரோதன௵ ஆடிமாதம் (7) ஏழாந் தெய்தி புதன்கிழமை பூர்வபக்ஷ சதுர்த்தியும் சுவாதி நக்ஷத்திரமுங் கூடிய நன்னாளில் மாலை $28\frac{3}{4}$ இருபத்தெட்டேமுக்கால் நாழிகையில் எல்லாம் வல்ல இறைவன்றிருவடி நீழலடைந்தனர்.

இம்மகானது பிரிவாற்றாது பல நாடுகளிலும் பல நகரங்களிலும் பல கிராமங்களிலும் உள்ள அநேககோடி ஜனங்கள் பரிந்தனரேனும், இதனால் மிகுந்த மனவருத்தமடைந்த இவர்களின் அருமைப் புதல்வியாகிய குருவம்மாள் என்னும் மாதுசிரோமணி தனது திருவாக்கிற் செனித்த நவமணிகள்போன்ற அற்புதப் பாடல்களை இயற்றிக் கொண்டுவந்து எம்மிடம் தந்தச்சியற்றினர்.

பாடல்கள் இவர்களின் பரம்பரையையும் அற்புதக் கைங்கர்யத்தையும் இனிது விளக்கியிருப்பது வியக்கத்தக்கது.

இந்தக்குடும்பத்தின் நற்செயல்கள், பூர்வகர்மத்தால் நோய் என்னும் நரகிற்கிடந்துழலும் மனிதர்களைக் கையால் தூக்கி ஆரோக்கிய சுகவாழ்வென்னும் சுவர்க்க பதத்தில் வைத்து அனுபவித்து மகிழச்செய்வதுபோலாகும்.

சுக்கிரவாரங்களில் ஷை குருசாமி கோட்டூருக்குச் சென்று பார்த்தால், ஜலவசதிக்காக நல்ல ஊற்றுள்ள கிணறுகள் ஏற்படுத்தி

உயர்ந்த காளைகளைக்கொண்டு கமலைத்தண்ணீர் இறைப்பித்து ஸ்நான பானங்களுக்கும் சமையல் முதலானவைகளுக்கும் உதவுவதும், சமையல் வசதிகளுக்கும் ஜனங்கள் தங்குவதற்கும் கட்டிடங்கள் அமைத்திருப்பதும், பலர் சடைச்சாமி சந்நிதி முன்பாகப்பொங்கலிட்டு நிவேதிப்பதும், சனங்களுக்குத் தேவையான பண்டங்களை அயலூர்களிலிருந்து வண்டிகளிற் கொண்டுவந்து வைத்துப் பலர் விற்பதும், பாலர் முதல் விருத்தர்வரை பிரார்த்தனையின்படி சிகை களைவதும், குழந்தைகளுக்குப் பெயர்கள் வைப்பதும், ஜாதிமத வித்தியாசமில்லாமல் பெருங்கூட்டமான ஜனங்களுக்கு ஒரேதடவையில் மந்திரித்துக் குளைப்பார்வை பார்ப்பதும, ஜனங்கள் காணிக்கைகள் செலுத்துவதும், விலகுங்கள் விலகுங்கள் என்ற சப்தமும், எண்ணெய் மிளகு மஞ்சட்கிழங்கு முதலானவைகளை மந்திரித்துக் கொடுப்பதும், மாவிளக்குகள் வைப்பதும், அறையினுள்ளிருந்து பெருமிதமாகச்சூடன் கொளுத்தி அருச்சித்து வெளியில் வந்து யாவருக்கும் வினைகெடத் திருநீறளிப்பதும் சொல்லவொண்ணாத ஆச்சரியத்தைத்தரும்.

குருசுவாமி என்னும் பெயர்பெற்ற ஆண்பாலர்களும், குருவம்மாள் என்னும் பெயர்பெற்ற பெண்பாலர்களும் இந்தக் குருசுவாமி கோயிலுக்கு அடிமைகளேயாவர்.

குழந்தைகளுக்கேனும், வயதுவந்த மற்றவர்களுக்கேனும் தேகங்களில் எந்த இடத்திலாவது பெருவீக்கங்கண்டு சகிக்கவொண்ணாத் துனபுறுங்கால் அதைத்தீர்க்க எத்தகைய ஆங்கில நிபுண டாக்டர்களுகரும் அரிதாயிருக்கும். தாங்கள் வசிக்கும் இடங்களில் பசுவின் சாணத்தால் மெழுகி ஒரு பாத்திரத்தில் ஆமணக்கு நெய்யை ஊற்றிவைத்து இந்தக் குருசுவாமியைத் தியானித்து அதில் திருநீறுசேர்த்துக் குழைத்து அவ்வீக்கங்களிற் போட்டு வந்தால் நாளடைவில் ஒருபக்கத்தில் முகங்கொண்டு உடைந்து ஆச்சரியப்படும்படியான நிலைமையில் குணமாகுமென்பது யாவரும அறிந்த விஷயம்.

தற்காலம் இந்தப் புன்னைமுத்துக் குருசாமியவர்களின் தவப்புதல்வர்களாகிய செல்லச்சாமி என்ற குருநாதசாமியும், சர்க்கரைச்சாமி யென்ற நாகநாதசாமியும், இதுபாடிய குருவம்மாளாகிய பெண்மணியும், இளைய தாயாராகிய மாரியம்மாளும, அவள் திருவயிற்றுக் குழந்தையாகிய முத்துமாரியப்பனும், செல்லச்சாமி யென்ற குருநாதசாமியின் புதல்வர்களாகிய வீரபத்திரசாமி, இரத்தினசாமி, பால்சாமி யென்ற குழந்தைகளும் இருக்கிறார்கள்.

இப்பரம்பரை நீடூழிவாழ எல்லாம் வல்ல இறைவன் திருவருள் புரிவாராக.

இவ்வூரில் தண்ணீர்க்கஷ்டத்தை நீக்கும்பொருட்டு திருக்குளம்வெட்ட ஆரம்பித்து வேலை நடந்து வருகிறது இதற்காக தனது உடல், பொருள், ஆவி மூன்றினாலும் பெரும் பிரயாசை எடுத்துக்கொண்டிருப்பவரும், இதற்கண்ட கனம் புன்னைமுத்துக் குருசாமியவர்களின் மருகரும், இப்பிரபந்தமியற்றிய குருவம்மாளின் நாயகருமான மகா-ா-ா-ஸ்ரீ வீ. கருப்பன் செட்டியாரவர்களின் கருத்துக்கிணங்கி அந்த உத்தம கைங்கரியத்தைப் பூர்த்திசெய்ய பக்தகனதனவான்கள் போதுமான பொருளுதவிசெய்து ஆதரித்துப் புகழையும் இஷ்டசித்திகளையும் அடையும்வண்ணம் வேண்டிக் கொள்ளுகிறேன்.

அ. முத்துச்சாமிப் பிள்ளை,
மானேஜிங் புரோப்ரைட்டர்,
மீனலோசனி அச்சியந்திரசாலை, மதுரை.

சாற்றுக்கவிகள்.

மதுரை வடக்காவணிமூல வீதியிலிருக்கும் மகா-ா-ா-ஸ்ரீ
மு. சி. க. கனகசபாபதி செட்டியாரவர்கள் பாடியது.

கற்கண்டோ தேனோ கனிரசமோ பாலோவென்
றற்புதப்பா வாண ரதிசயிக்க—விற்புரையும்
புருவக் குருவம்மாள் புகன்றிட்டாள் புன்னைமுத்துக்
குருசாமித் தந்தைபுகழ் கூர்ந்து.

மதுரை மீனலோசனி அச்சியந்திரசாலை மகா-ா-ா-ஸ்ரீ
அ. முத்துச்சாமிப்பிள்ளையவர்கள் பாடியது.

சீர்பெருகுங் குருசாமி கோட்டூர் வாழ்ந்து
செகத்திலுளோர் பிணியகற்றிச் சிறந்த முத்திப்
பேர்பெருகும் சிவலோக பதவி பெற்ற
பேராளர் புன்னைமுத்துக் குருசா மிக்குப்
பார்பெருக வந்துதித்த குருவம் மாளாம்
பண்புளபுத் திரிபகர்ந்த பாட லின்சொல்
ஏர்பெருக நீடூழி நிலைபெற் றோங்க
எழிற்சோம சுந்தரன்றா ளிறைஞ்சி னேனே.



உ

சிவமயம்.

குருசுவாமி துணை.



குருசாமி கோட்டூர்

புன்னை முத்துக் குருசுவாமியவர்களின்

பேரின்ப முத்திப் பாடல்கள்.

காப்பு.

விநாயகர் துதி.

வெண்பா.

ஆனைமுகத் தைங்கரனே அங்குசவி நாயகனே
நானுன்னைப் போற்றி நமஸ்கரித்தேன்—வானில்
மூதறிஞர் போற்றுபுன்னை முத்துக் குருசாமி
காதைசொல உன்பாதங் காப்பு.

சரஸ்வதி துதி.

சரசுவதி என்னாவிற் றங்கிக் கலைதருவாய்
சிரசுதனி லேற்றிநின்றாள் சேவித்தேன்—தருமவுருப்
புன்னைமுத்து வள்ளல்திருப் பொன்னாடு போனபரி
சின்னதெனக் கூறவிசைந் தே.

புன்னை முத்துக்குருசாமி பேரில் இரங்கல் வெண்பா.

புன்னைமுத்துப் புண்ணியனே பூவுலகி லேழைகட்குக்
கன்னனென வேகொடுக்கும் கண்ணியனே—மன்னவனே
பொன்னாட்டு ளோர்பிணியைப் போக்கநினைந் தேகினையோ
வென்னாற்று மெம்மிதய மே.

சிந்து.

விநாயகர் துதி.

கையமுகவன் பாதமதைக் கண்டுமலர் சாத்திச்—சொல்வன்
கலியுகத்திற் கீர்த்தி—மிக்க
கதைவிவர நேர்த்தி—கொண்டற்
கன்னன்புன்னை முத்துக்குரு சாமியின்றன் பூர்த்தி.

சுப்பிரமணியர் துதி.

தந்தைக்குப தேசஞ்செய்த சண்முகவே லாண்டி—இரு
தையலரு ளாண்டி—இந்தத்
தருணம்வரு வாண்டி—குரு
சாமிபுகழ் சொல்வனவன் றாளிணையை வேண்டி.

கண்ணன் துதி.

பஞ்சவரைக் காத்தகிருஷ்ண பச்சமுடன் வருக—சிந்து
பாடவரந் தருக—உன்றன்
பாதநினைந் துருக—பூவிற்
பவுத்திரவான் புன்னைமுத்துப் பண்பன்புகழ் பெருக.

சரஸ்வதி துதி.

வாணியெனும் பாரதியின் மலர்ப்பதத்தைத் துதித்து—நல்ல
வாசமலர் பறித்து—வந்து
வாகுடனர்ச் சித்துச்—சொல்வன்
மண்ணுலகை விட்டகுரு சாமிகதை குறித்து.

வரலாறு.

செங்கோலன் கோட்டூர்க்குச் செல்வஞ்சிறப் போடு—நல்ல
திருப்பணிகள் வீடு—கட்டிச்
சிறக்கப் பாண்டி நாடு—வாழ்ந்தான்
சீமான்புன்னை முத்துக்குரு சாமிப்பெய ரோடு.

வழிவழியாய் வந்தகுல வாழ்வினைமேற் கொண்டு—பார்
வதிநாதன் தொண்டு—தனில்
வளர்போகங் கண்டு—வெகு
வைபவமாய் வாழ்ந்தனனே மாயையெலாம் விண்டு.

வைகலுந்தன் சமுகம்வரு வார்பிணிகள் போக்கி—சுக
வாழ்வுபெற நோக்கி—அவர்
வழங்குநிதி தேக்கி—பல
வகைத்தருமஞ் செய்தனனே வளர்புகழுண் டாக்கி.

திருமடம்நந் தனவனங்கள் திருக்குளங்கள் சேர்த்து-வந்தோர்
செழிப்புறப்பூ ரித்து—என்றும்
ஜெயங்கொளப்பா வித்து—வெகு
சிறப்புடனல் லறநடத்தித் திகழ்ந்திடுங்கா லத்து.

சம்பாஷணை.

செல்லச்சாமி யென்றகுரு சாமிதனைப் பார்த்துப்—பல
சிந்தித்துமெய் வேர்த்து—அப்பா
சிவமணியே கூர்த்து—நன்மை
சீர்பெறச்செய் நான்கதிக்குச் செல்வனென்றார் ஆர்த்து.

சர்க்கரையை யருகிருத்தித் தாரணியில் உற்ற—பல
சனங்கள்புடை சுற்ற—என்றுஞ்
சந்ததிபின் பற்ற—வாழ்வாய்
சங்கடங்க ளின்றியென்று சீர்வதித்தார் முற்ற.

மாரியப்ப னைமடியில் வைத்துகந் தெல்லாரும்—கொண்ட
மனவருத்தந்தீரும்—மண
மாலைசூட்டிப் பாரும்—மிகு
வாழ்வுமுண்டா முங்கட்கென மகிழ்ச்சிகொண்டார் யாரும்.

தாங்கவொண்ணாப் பாரமென்றன் தலையில்வைக்க லாமா—என்
தவிக்கவிடப் போமா—இனிச் [னைத்
சகத்திற்கா ணுவோமா—பெற்ற
தகப்பனைப்போ லாதரிக்குந் தன்மைபிறர்க் காமா.

மலைமுகட்டுத் தீபம்போல வாழ்ந்திருப்பாய் சுதனே—என்
மனதுக்குமற் புதனே—சிவன்
மலரடியர்ச் சிதனே—உன்போல்
மாணிக்கத்தை யென்றுகண்டு மகிழ்வனொரு மதனே.

பிள்ளைகளைவளர்த்தெடுக்கும் பெருமையுள்ளகுணமே—என்னைப்
பெற்றதவ கணமே—என்மேற்
பிரியம்வைத்த தனமே—இணை
பேசரிய பூசைசெய்து பேணுவதார் தினமே.

சாப்பிடவா செல்லச்சாமி யென்றழைப்பீர் மெய்யா—சிவ
தலங்கள்செல்லுந் துய்யா—எமைத்
தவத்திற்பெற்றீ ரையா—மனச்
சஞ்சலங்க ளில்லாமலே தனமளிக்குங் கையா.

இருப்பதுவு மிறப்பதுவு மென்செயலோ பாலா—மதி
யிற்சிறந்த லோலா—விதி
எய்தினதே சீலா—கொடை
யேசிறந்த தீந்திடுநீ யெவர்க்குமனு கூலா.

தருமமதை யென்றுமற வாதேசெல்லச் சாமி—மிகத்
தான்விளையும் பூமி—நல்லோர்
தங்களைநீ சேமி—மனத்
தைரியத்தை விட்டிடாதே தயைபுரிவார் சாமி.

மஹாதேவா வென்றசத்தம் வானுலகிற் சொலிக்க—வந்த
மாந்தர்குதூ கலிக்கப்—பெற்ற
மைந்தர்களஞ் சலிக்க—இந்த
மண்ணுலகில் வாழ்ந்துசெய்த மாதவங்கள் பலிக்க.

இனிப்பிழையே னென்றுமன திச்சையெலாம் விட்டுச்—செக
திசனைக்கும் பிட்டுப்—பூதி
யாவருக்குந் தொட்டுப்—பூசி
யேகினர்வி மானமதி லின்பவசப் பட்டு.

கூடுவிட்டுச் சென்றவுயிர் குருபதத்தைச் சேரச்—சனங்
கூடிப்புகழ் கூற—சிறு
குழந்தைகளுந் தேற—உடலைக்
குளிப்பாட்டிக் கொண்டுவைத்தார் குரிஞ்சிதனிற் சேர.

புகழ்க்கோட்டூர்க் குருசாமிப் புன்னைமுத்து நாதா—நிதம்
பொருள்கொடுக்குந் தாதா—பெற்ற
பூமிதவிக் காதா—சிறு
புதல்வர் கையி லொப்புவித்துப் போனதென்ன போதா.

குருநாத சாமிதன்னைக் கூப்பிடுங்க ளென்றார்—சுற்றிக்
கோடிஜனம் நின்றார்—சுடர்
கொளுத்தினர்க ணன்றாய்க்—கையிற்
குளைகொடுத்து முடிசூட்டிக் கும்பிட்டனர் ஒன்றாய்.

பட்டத்திற்கு வந்தவையா பவுஷடைய வேணும்—இனிப்
பலவிதமுந் தோணும்—கெடும்
பகைவர்முகம் நாணும்—புவி
பரவிடுமா சனமுறவே பாரபுத்தி பூணும்.

வாத்தியமு ழக்கத்துடன் மணிமகுடஞ் சூட்டி—ஊரார்
மகிழ்வுபெற நாட்டி—வந்தோர்
வன்பிணிநோ யோட்டி—என்றும்
வாழ்க வாழ்க வென்றுநீறு வாங்கினார்கை நீட்டி.

தார்மகுடம் புனைந்தசெல்லச் சாமியுள மகிழ்ந்தே—நின்ற
சகலரையும் புகழ்ந்தே—இனித்
தாமதியா துகந்தே—கதி
சார்ந்தகுரு சாமியைச்ச மாதிசெய்ய விசைந்தே.

சிற்பமதிற் றேர்ச்சியுள்ள சிலர்கள்கூடி முல்லை—மலர்த்
தேர்சமைத்தார் ஒல்லை—இணை
ஜெகத்தி லிதற்கில்லை—புகழ்
சிறந்தவிஸ்வ கர்மன்கண்டாற் றிகைத்தற்கைய மில்லை.

அச்சிவிகை யலங்காரம் ஆருஞ்சொல்லத் தாமோ—அதி
லமைந்ததுசித் திரமோ—தொங்க
லழகியபூச் சரமோ—குண
அரசன்புன்னை முத்துக்குரு சாமிபெற்ற வாமோ.

மக்கள்மரு மக்களுடன் வளமைதவ றூழல்—கிரியை
வகையும்பிச காமல்—செய்து
மனதுமயங் காமல்—அந்த
மலர்த்தேரி லேற்றினரே மைந்தர்சடை யாமல்.

மேலைத்தலை வாசலில்வி மானமதைத் தூக்கி—வர
வீதிசுத்த மாக்கி—ரத
விமரிசையை நோக்கிச்—சனம்
மேவுபுகழ் பாடினரே விசனமெலாம் போக்கி.

சங்கரலிங்காச்சாரி தான்கிரகந்தாண்டி—ரதஞ்
சார்ந்ததுரைப் பேண்டி—பல
சர்ச்சனர்க ளீண்டிச்—செய்த
சங்குஜெய கண்டியொலி சாற்றவரி தாண்டி.

ஸ்ரீரங்க நாயகரைத் தெரிசிப்பதுபோலே—தேர்
திரும்பவுமுன் னாலே—சனஞ்
செறிந்தனர்பின் னாலே—அந்தச்
சிறப்பொருநா வாற்புகலத் திருமோவென் னாலே.

திகைக்கினுமச் சிறப்பெடுத்துத் தெரிந்தமட்டுஞ் சொல்வேன்
றிருவடியைக் கொள்வேன்—சிவிகைத் [—சிரசிற்
திருவுலாவென்விள்வேன்—மேலத்
திசைபோய்வட பால்வருதே ரழகைக்கண் ணுற் கொள்வேன்.

அசையாமல் வருகிறதை ஆனந்தமாய்ப் பார்த்து—சனம்
அனைவருங்கை கோத்துச்—சமா
தடியினிலே சேர்த்து—மல
ரழுத்தியதேர் விட்டிறக்கி யவருடலைக் காத்து.

சடைப்பாண்டி யன்சந்நிதி தனிலிறக்கி னார்கள்—சிவ
தவசியர்வந் தார்கள்—முத்தி
தரவேபாடி னார்கள்—சுரர்
தாமறிந்து மலர்மாரி தாவிப்பொழிந் தார்கள்.

குரோதனநல் வருடமாடி மாதமேழாந் தேதி—புதன்
கொண்டவாரஞ் சோதி—இந்தக்
குவலயப்ரக் யாதி—மிக்க
குணநாதன் புன்னைமுத்துக் குருவுற்றார்மெய்ப் பூதி.

சடைமுடியோ டிருக்குங்குரு சாமிபதம் வாழி—கோட்டைத்
தலந்தழைக்க வாழி—வணிகர்
தங்கள்குலம் வாழி—முத்தி
சார்ந்தபுன்னை முத்துக்குரு சாமிபதம் வாழி.

நொண்டிச்சிந்து

சடைச்சாமி சமூகத்திலே—இருக்குஞ்
சந்ததங் கண்டுமகிழ்ந் தாருளத்திலே
கிடைக்குமோ பூதலத்திலே—இவர்க்கே
கிட்டுபெயர் பிறர்க்கெனுந் தருணத்திலே
திருப்பரங் குன்றமிருந்து—அன்பர்க்குத்
தெளிவுப தேசஞ்செய் தன்னமிடும்
தருப்பெருந் திருவாளர்—மகாதேவ
சாமிக ளடியவ ருடன்வந்து
அருகினில் நின்றுகொண்டு—மனமகிழ்ந்
தபிஷேக மனைத்தையுஞ் செய்துகந்து
திருமிகும் பொன்னுடை—சாத்திநற்
செல்வமெ னுந்திரு நீறணிந்து
களபகஸ் தூரிமிகும்—சந்தனக்
கலவையுந் திமிர்ந்துபொட் டுகளுமிட்டு
வளஞ்செய்பொன் மணிக்கலன்கள்—பூட்டி
வரந்தரு ருத்ராக்க மாலையணிந்து
சடையப்ப சாமிதனக்குச்—சிறப்புடன்
சாத்திவந்த ரோஜாப்பூ மாலைதரித்து
அடைவுடன் சொர்க்கவாசல்—திறந்துவைத்
தளவில்லாக் கற்பூர தீபம்பொருத்தி

அரஹர சம்புசிவவென்—றனைவரு
மாரவா ரத்துடனே யேந்திச் சென்று

பரவுகல் மண்டபத்தி—லிறக்கிச்சடைப்
பாண்டியன் கைக்குழந்தை யாயிருக்க

பண்புயர் பெட்டகமொன்—றமைத்ததிற்
பரிவுட னடக்கிநற் றீபமுடன்

எண்பெறு பூசனைப்பாத்—திரங்கள்வைத்
திசைந்தகற் பூரத்தின் றீபமிட்டு

புலித்தோல் காயாசம்—யாவும்
பொருந்திட வைத்தந்தப் பெட்டகத்தைச்

சொலித்திட மூடிமண்ணால்—மறைத்துச்
சுந்தர மாகவேச மாதிசெய்து

கருங்கல்லாற் றளவரிசை—பீடம்
கனம்பெறு லிங்கம்வைத்துக் கட்டிமுடித்தே

விரும்பிய சடங்கனைத்துந்—தவறாமல்
விதிமுறை யுடன்செய்து விமரிசையாய்ச்

சமாதியி னெதிரிருந்து—யாவர்க்குஞ்
சந்தோஷ மாகத்தான தர்மங்கள்செய்து

உமாபதி பதந்தொழுதே—ஐந்தெழுத்
தோதியே யாவர்க்கும் பூதி நல்கி.

புன்னைமுத்துக் குருசாமி—சரிதை
புகன்று ஜனங்களுக்குப் பின்னுஞ்சொல்லுவார்

அன்னையினு மன்பிலதிகன்— நொடிக்குள்
அனந்தமா யிரர்பிணி தீர்க்கும் பெரியன்.

அருள்விளக் காயிலங்கி—வணிகர்க்
கரசராய்ச் சம்பிரம மாகத்துலங்கி

பெருமையா யைம்பைத்தொரு—வயதுக்குள்
பெருகிட வில்லற வாழ்க்கைதனை

அன்புட னேநடத்தி—அதனால்
ஆவது துன்பமென வேயகற்றி

இன்பமென் நாளுந்தரும்—கயிலைக்
கேகின ரென்பதற் கையமுண்டோ
முத்திபெறு குருசாமி—கருணை
முழுதுல கையுங்காக்கு மெனமொழிந்தார்
துத்தியஞ் செய்துஜனங்கள்—சகலரும்
சுற்றிவந்து சமாதியைத் தொழுதுகொண்டார்
வந்திருந்த சாதுக்களுக்கும்—மக்கண்மனை
வாழ்க்கையுள் ளோர்களுக்கும் மற்றவர்கட்கும்
சிந்தை மிகமகிழப்—பாலடிசில்
சிறக்கவுண்பித்துப சரித்தனரே.

எக்காலக்கண்ணி.

பூவுலகிற் கீர்த்திபெற்ற புன்னைமுத்துப் பூபதியே
ஆவலுடன் நாங்களினி அஞ்சலிப்ப தெக்காலம்
காலையிலே தானெழுந்து காளைகளைப் பார்வையிட்டு
வேலைசெய்வோ ரண்டையிலே வீற்றிருப்ப தெக்காலம்
பசுத்தொழுவில் வந்துநின்று பால்கறக்கச் சேதிசொல்லும்
விசுவாச முள்ளதுரை வெளிப்படுவ தெக்காலம்
வடக்கு வழிசேர்ந்து வருவோ ரிளைப்பாற்றி
மடத்தி னெழில்பார்த்து வருவதினி எக்காலம்
சுடலைமுத்துப் பிள்ளையிடஞ் சொல்லிச் சிலவசனம்
கடவுளைப்போற் பாதைவழி காண்பதினி எக்காலம்
சுற்றிச் சிசுக்கள்வரத் துட்டுகளைத் தானெடுத்துப்
பற்றிவந்த பாலர்கட்குப் பரிசளிப்ப தெக்காலம்
படப்படியை நோக்கிப் பாதையிலே போம்பொழுது
நடத்திக் குழந்தைகளின் நடுவில்நிற்ப தெக்காலம்
எலுமிச்சந் தோப்பினிலே யிருக்கு மிருகிணற்றின்
ஜலப்பெருக்கைக் கண்டு தான்மகிழ்வ தெக்காலம்

கன்னல் வளம்பார்த்துக் கம்மாய் வழிகூடி
மன்னர் பரவுநதி வந்துநிற்ப தெக்காலம்

போத நதிதனிலே போய்த்தந்த சுத்திசெய்து
பூதி யணிந்து புறப்படுவ தெக்காலம்

நந்த வனந்தனிலே நாடிவந்த பேர்சமைக்க
அந்தமடஞ் சுத்திசெய்ய ஆள்விடுவ தெக்காலம்

பூச்செடிக்கு நீர்வார்க்கப் பொருந்தினரைத் தேடிவிட்டு
ஆச்சுதே நாழிகையென் றகலுவது மெக்காலம்

அம்மன்போ தம்மனைவளடியைத் தான்பணிந்து
தம்மனத்திற் றியானமுடன் சாருவது மெக்காலம்

எரம்பன் றுடொழுதே யெங்காளி யைப்போற்றிச்
சீரங்க நாயகரைச் சேவிப்ப தெக்காலம்

சடைப்பாண்டி யன்றனது சந்நிதியைத் தான்வணங்கிக்
கடைவீதி யோரம்வரக் காண்பதினி எக்காலம்

பொங்கல்வைக்குஞ் சித்திரமும் புட்பந் தருமணமும்
தங்கள் மனங்குளிரத் தான்காண்ப தெக்காலம்

சந்நிதி வாசலிலே தலைமுடியைத் தாங்களைவோர்
நன்னியமங் கண்டுகண்டு நனிமகிழ்வ தெக்காலம்

சிலகா ரியங்கருதித் தெருவைவிட்டு வீடுவந்து
பலகாரம் வாங்கிவரப் பணித்தருள்வ தெக்காலம்

இட்டலி தோசைகளை யின்பாய் வரவழைத்துக்
கட்டிடத்தி னுள்ளே கலந்துண்ப தெக்காலம்

காப்பிசாப் பிட்டவுடன் காலைமாட் டுத்தொழுவிற்
றேய்ப்புச் செதுக்கியினாற் செதுக்குவது மெக்காலம்

பத்துமணி யாயினதே பாங்குளவெந் நீர்வைக்க
இத்தனை நேரமோ வென்பதினி யெக்காலம்

சின்னுசெட்டி தேய்த்துவிடச் சீக்கிரத்தி லேகுளித்து
உன்னதச்சோ மன்தோய்க்க வுரைப்பதினி எக்காலம்

மேல்துவட்டி யாடைகட்டி விநாயகரைப் பூசைசெய்து
கால்கழுவி மந்திரிக்கக் காண்பதினி யெக்காலம்

சவுக்கையிலே தானேறிச் சஞ்சலங்க ளுள்ளோரைக்
கவனமுடன் றேற்றிக் கருணைசெய்வ தெக்காலம்

காயாச மீதிருந்து கன்னேசை கொண்டவர்க்கந்
நோயோட மந்திரித்து நோக்குவது மெக்காலம்

ஆறாத புண்ணோ டநேக வியாதிகளை
நீறாக வென்றுதிரு நீறளிப்ப தெக்காலம்

கையிற் குழையெடுத்துக் கன்மவினை கொண்டோர்க்குச்
செய்யசிவ பூஜையினாற் றீர்ப்பதினி எக்காலம்

எண்ணெய்கொண்டு நொந்துவந்தோ ரின்புறவே மந்திரித்துப்
புண்ணனைத்தும் போக்கிப் புகழ்பெறுவ தெக்காலம்

பிள்ளையில் லாதசில பெண்கள்மஞ்சள் கொண்டுவர
வள்ளல் பதநினைந்து மந்திரிப்ப தெக்காலம்

இளைப்பு வயிற்றுவலி எலும்புள்ள வியாதியெல்லாம்
மிளகைச் செபித்துநல்கி விலக்குவது மெக்காலம்

கூட்டமத னைவிலக்கக் கோளாறு சொல்லுகையில்
வாட்டமெலாந் தீர்ந்துவந்தோர் வழிவிடுவ தெக்காலம்

பள்ளுப் பறைகளுக்கும் பாங்குடனே மந்திரித்து
அள்ளியே வெண்ணீ றளிப்பதினி யெக்காலம்

காணிக்கை யைவாங்கிக் காயாசத் துள்ளடக்கி
ஆணிப்பொன் னாசனத்தி லமர்ந்திருப்ப தெக்காலம்

கூன்குருடு சப்பாணி கோளால் வருவோர்க்குத்
தேன்போல் வசனித்துத் தீர்ப்பதினி எக்காலம்

தப்பாது நீற்றையள்ளிச் சரமாரி போற்பொழிந்து
சுப்பையா பூட்டென்று சொல்லுவது மெக்காலம்

சொன்னவண்ண மேகதவைத் துரிதமுட னேபூட்டி
என்னவென்று வந்துதங்க ளெதிரில்நிற்ப தெக்காலம்

வயிறு பசியாறி வருவனென்று வீடுவந்து
சயமுறுவெண் ணீறணியச் சலங்[illegible]ப தெக்காலம்

மாரியம்மாள் கொண்டுவந்து [illegible]தெண் ணீரெடுத்துப்
பூரித்துப் பூசைசெ[illegible] [illegible]லம்

செல்வச் சிகாமணியே சீக்கிரத்திற் சாப்பிடுவோம்
எல்லோரும் வாருங்க ளென்றெழுவ தெக்காலம்

மாரியப்பா வீரபத்ரா மதிரத்னம் வாருமென்றே
கோரி யனைவரையுங் கூப்பிடுவ தெக்காலம்

எண்சா ணுடற்கடிசி லெங்நேர மாவதென்று
கண்சாத்தி நாயகியைக் கண்டிப்ப தெக்காலம்

அந்த வசன மவள்றிந்து சீக்கிரத்தில்
வந்தே னெனக்கொண்டு வந்திடுவ தெக்காலம்

நளபாக நல்லமுது நானுவி தக்கறியும்
வளமாய்ப் படைக்கவுண்டு மகிழ்ந்திடுவ தெக்காலம்

அள்ளிப் புசிக்கையிலே அழைத்து மருமகளைப்
பிள்ளைகளுக் கூட்டெனவே பேசுவது மெக்காலம்

சர்க்கரையைக் காணேமே சடுதி யழையுமென்று
மக்களை யேவி வரவழைப்ப தெக்காலம்

சாப்பிட்டு மேலைத் தலைவாச லோரம்வந்து
கூப்பிட்டு மக்களுடன் கூடிநிற்ப தெக்காலம்

சாத்துவிக மாயிருந்து தாம்பூலங் கொண்டுங்கால்
தேய்த்துவிட வேவலர்க்குச் செப்புவது மெக்காலம்

கோவிலுக்கு வந்தோரைக் குழந்தைகளைக் கொண்டழைத்து
ஆவலுடன் பாட அருள்வதினி எக்காலம்

சந்நிதியில் வீற்றிருந்து சங்கீத வாத்தியங்கள்
உன்னதமாய்க் கேட்டின் புறுவதினி எக்காலம்

வாத்தியங்கள் கேட்டு மகிழ்வாய்த் துயின்றுமனப்
பூர்த்தியுடன் வீட்டுக்குப் போயிருப்ப தெக்காலம்

வீட்டி லுள்ள பேர்களுக்கு வேண்டுவன விண்டுதனைத்
தேட்டமுற மக்களுடன் சேர்ந்திருப்ப தெக்காலம்

சாயங் கிரமாகத் தான்வெளியே [illegible] றுவந்து
நேயமுள்ள பூசைசெய் [illegible] தெக்காலம்

சுப்பையா வாத்தியமுஞ் சுருதி களுமுழங்கு
மப்பொழுது ருத்ராக்க மணிவதினி யெக்காலம்

கன்னிறைந்த வுள்ளறைபோய்க் கற்பூராக் கினிநடுவே
மன்னி மகிழ்ந்துதவ யாண்பருள்வ தெக்காலம்

தெரிசித் தருளடைந்த சிவனடியார் சேர்ந்துவந்து
வரிசையுடன் வெண்ணீறு வாங்குவது மெக்காலம்

சவுக்கையிலே தானேறித் தந்தமர்க்குஞ் சார்ந்தவர்க்கு
மெவர்க்குமே தாம்பூல மீந்துவப்ப தெக்காலம்

வாத்தால் மகப்பேறு வாய்த்தோர்கள் மக்களைத்தங்
காத்தேந்தப் பெயர்சூட்டிக் களிப்புறுவ தெக்காலம்

பேரிட்டு மந்திரித்துப் பெற்றகா ணிக்கைகளை
வாரி யெடுத்து வருவதினி யெக்காலம்

இரும்பிற்செய் பெட்டகத்தே எண்ணிக்கை யாற்போட்டுத்
தருமங்கள் செய்தி தயமகிழ்வ தெக்காலம்

வந்துபல காரவர்க்க வகையுடனே தான்புசித்துச்
சிந்தைமகிழ்ந் தேசயனஞ் செய்வதினி யெக்காலம்

பஞ்சணை மெத்தையிலே பள்ளிகொண்டு தானெழுந்து
நெஞ்சத் தான்ருள் நினைவதினி யெக்காலம்

பொக்கிஷத்தைத் தான்திறந்து போட்ட பொருளெடுத்துப்
பக்குவமா யெல்லார்க்கும் பகிர்ந்திடுவ தெக்காலம்

கல்லணையிற் சாய்ந்து கணக்கே டெடுத்துவந்து
எல்லோர்க்குஞ் சம்பளத்தை யீவதினி யெக்காலம்

மாசமுறு கார்த்திகையில் மாபரங்குன் றிற்குகன்ருள்
நேசமுடன் போற்றிவந்து நீறளிப்ப தெக்காலம்

சங்காலிங் கத்தின்வண்டிச் சவ்வாரி செய்துவெளி
யெங்குமுலாப் போய்மீண் டிறங்குவ [illegible]மெக்காலம்

மங்களமாய்ப் போய்வருவோ[illegible]ாருக் காலெனவே
சிங்கணனை [illegible]லம்

சவ்வாரி மாடவிழ்த்துச் சடுதியிலே வண்டிகட்டச்
செவ்வையா யேறிச் செலுத்துவது மெக்காலம்

விருது நகர்க்கேகி விரும்புஞ் செயலனைத்துங்
கருதும் படிமுடித்துக் களித்துவா லெக்காலம்

குருமணிக்கண்ணி.

சனங்க ளுறவையெல்லாஞ் சந்தையிற்கூட் டம்மென்றே
மனத்துறவு கொண்டு மறந்தீர் குருமணியே.

காசாசை யற்றுக் கரும வினைகடந்து
பேசாத மோனநெறி பெற்றீர் குருமணியே

இவ்வுலக வாழ்க்கை யெல்லாமிடைஞ்ச லென்று
அவ்வுலக வாழ்க்கை யடைந்தீர் குருமணியே

கருவிகா ளாதியெலாங் கண்டு மனந்தெளிந்து
நிருவிகர்ப்ப நிட்டையிலே நின்றீர் குருமணியே

ஆருதா ரத்தை யனுதினமு மேகண்டு
கூருத யோகவின்பங் கொண்டீர் குருமணியே

பஞ்சபூ தங்கள் பாவிநின்ற தூலமிது
தஞ்சமல வென்றே தனித்தீர் குருமணியே

பொய்யுலகோர் நட்புப் போதுமென்று போனீரோ
தைய லொருபாகன் றன்பாற் குருமணியே

சொற்பனமே யில்வாழ்க்கை துய்ப்பனவுந் துக்கமென்றே
தற்பரன்றன் பொற்பாதஞ் சார்ந்தீர் குருமணியே

வானவர்கள் வாழ வரமந் திரங் [illegible]ட்கப்
போனீரோ கண்ணுதல்பாற் [illegible]ந்துக் கு[illegible]ணியே.

போற்றிப் பதிகம்.

திருமாலின் மருகாநின் றிருத்தாள் போற்றி
தெரிசித்த பேர்க்குமுத்தி தருவாய் போற்றி
தருவேமீ னும்பிகைதன் தனயா போற்றி
தந்தைசுற்றிக் கனிபெற்ற சதுரா போற்றி
தருமலர்கள் கொய்துனடி சாத்திப் போற்றித்
தண்டனிட்டேன் கருணைபுரி புன்னை முத்துக்
குருநாத னெமையீன்ற கோதில் நாதன்
குணநாதன் மேற்கவிதை கூறத் தானே. (1)

புன்னைமுத்துக் குருநாதா பொற்றாள் போற்றி
புவனமெலாங் கீர்த்திபெற்ற பூபா போற்றி
அன்னையினு மன்புமிக்க வையா போற்றி
யம்புவிவாழ் வனைத்தையுமுள் வெறுத்தாய் போற்றி
சென்னெல்விளை கோட்டூரின் செல்வா போற்றி
தெய்வம்போ லெப்பிணியுந் தீர்ப்பாய் போற்றி
என்னையனே எம்முயிரே இறைவா போற்றி
எங்கள்குல மணிவிளக்கே போற்றி போற்றி (2)

கஞ்சமலர்த் திருப்பாதக் கழல்கள் போற்றி
கனவினிலுங் கொடைகொடுக்குங் கரத்தாய் போற்றி
வஞ்சனையில் லாதமனம் படைத்தாய் போற்றி
வன்பிணிநோ யகற்றியருள் வைப்பாய் போற்றி
தஞ்சமென்ற வேழைகளைக் காப்பாய் போற்றி
தகுமகத்தி லின்பதுன்பந் தவிர்த்தாய் போற்றி
அஞ்சலிசெய் தெந்நாளு மழைப்பேன் போற்றி
. யாசறிவே குருமணியே போற்றி போற்றி. (3)

மந்திரித்துப் புண்பிளவை தீர்த்தாய் போற்றி
மாதுகலை மகள்பதத்தை மறவாய் போற்றி
தந்திரியா யிருந்தாண்ட தனமே போற்றி
தன்மனத்திற் றைரியமே கொண்டாய் போற்றி

சிந்தையிலே சிவமயத்தைத் தேர்ந்தாய் போற்றி
சிநேகிதமா யடியவரைச் சேர்ந்தாய் போற்றி
எந்தையே யனுதினமுந் துதிப்பேன் போற்றி
யென்னைப்பெற்ற குருமணியே போற்றி போற்றி. (4)

பாலர்களி லாதசில பெண்கள் போற்றிப்
பணிந்திடமஞ் சட்கிழங்கு கொடுப்பாய் போற்றி
கோலமணிப் பீடமதி லிருந்தாய் போற்றி
குருபதத்தை நினைந்தெவையுங் கொடுப்பாய் போற்றி
ஆலமுண்ட கண்டனிணை யடிகள் போற்றி
அவாவினர்க்குப் புத்திரரை யளிப்பாய் போற்றி
நாலுவழி யுந்தெரிந்த நாதா போற்றி
நற்றவனே குருமணியே போற்றி போற்றி. (5)

அள்ளியள்ளித் தருமமிடு மரசே போற்றி
யார்க்குமுயிர்த் துணையான வையா போற்றி
பிள்ளைகளைப் பிரியாத பிதாவே போற்றி
பேரின்ப முத்திநிலை பெற்றாய் போற்றி
கள்ளமிலா வுள்ளமுள்ள கண்ணா போற்றி
கனவணிக குலந்தழைக்க வந்தாய் போற்றி
எள்ளளவும் பேதமிலா விதயா போற்றி
யென்னைப்பெற்ற குருமணியே போற்றி போற்றி. (6)

சூடதரி சனத்தினின்ற சுடரே போற்றி
சுப்பையா வென்றழைக்குஞ் சுகுணா போற்றி
பாடகர்க்குப் பரிசளிக்கும் பண்பே போற்றி
பந்துக்க ளுடன்வாழ்ந்த பவுசே போற்றி
தேடிவந்த பாலர்களை யணைத்தாய் போற்றி
தின்பண்டஞ் சேகரித்துக் கொடுப்பாய் போற்றி
கோடிசனத் தோடுவருங் கோவே போற்றி
கோட்டூர்வாழ் குருமணியே போற்றி போற்றி. (7)

பெற்றபிதா வேகுருவே பெரியாய் போற்றி
பெருமையுடன் வாழ்ந்திருந்த பிரபு போற்றி
கற்றறிந்தார் பாவணிந்து களிப்பாய் போற்றி
கண்டபிழை பொருத்தருளுங் கண்ணே போற்றி

சிற்றின்ப வாழ்க்கைதனைச் சேராய் போற்றி
சிற்சபையே குடியிருப்பாய்ச் சேர்ந்தாய் போற்றி
நற்றவமே புரிந்திருந்த நாதா போற்றி
நானிலத்தோர் நாயகமே போற்றி போற்றி. (8)

நிதியுடனே யாசுரிமை நிறைந்தாய் போற்றி
நின்மலா னந்தசுக நேர்ந்தாய் போற்றி
பதியாகி யிருவர்மணம் பயின்றாய் போற்றி
பாலர்களுக் காதார குருவே போற்றி
அதிமதுர வசனகுண வழகா போற்றி
யத்துவித சித்தாந்த வமலா போற்றி
துதிமருவு புன்னைமுத்துச் சாமி போற்றி
துணையடிகட் கெந்நாளும் போற்றி போற்றி. (9)

முத்துமணிக்கண்ணி.

நாகநாத குருசாமி முத்துமணியே—செய்த
நற்றவத்தி லேஜெனித்த முத்துமணியே

ஆகமங்க ளையுணர்ந்த முத்துமணியே—யெங்கு
மரூபமாய் நின்றிலங்கு முத்துமணியே

பொன்னங்கருப் பாயிபெற்ற முத்துமணியே—தவப்
புன்னைமுத்துப் பேர்புனைந்த முத்துமணியே

மன்னனென வாழ்ந்திருந்த முத்துமணியே—சங்க
மங்களுக்கே யன்னமிடும் முத்துமணியே

முத்தம்மை யென்றதாயை முத்துமணியே—மண
முடித்தாய்முதற் றாரமதாய் முத்துமணியே

எத்தலங்க ளும்புகழ முத்துமணியே—நாளு
மேகபோக மாகவாழ்ந்த முத்துமணியே

நற்றவங்க ளேபுரிந்து முத்துமணியே—குரு
நாதனடி யேவணங்கு முத்துமணியே

சிற்றின்ப வாழ்க்கையிலே முத்துமணியே—செல்லச்
சிகாமணியைப் பெற்றெடுத்த முத்துமணியே

3

கற்பகத்தைப் போலிருந்த முத்துமணியே—சிவ
கைங்கரிய மேபுரிந்த முத்துமணியே

சர்க்கரை யெனுஞ்சுதனே முத்துமணியே—வெகு
சந்தோஷ மாகப்பெற்ற முத்துமணியே

இந்தப் பவுஷுடனே முத்துமணியே—யன்னை
யிருந்து சுகித்திலளே முத்துமணியே

சிந்தை மகிழ்ச்சியுடன் முத்துமணியே—தான்
சிவலோகஞ் சேர்வனென்ருள் முத்துமணியே

மாங்கல்யத் துடன்போக முத்துமணியே—நல்ல
மாதவங்கள் செய்திருந்தாள் முத்துமணியே

ஆங்கால மானதினுல் முத்துமணியே—உன்ற
ஞதீனம் விட்டகன்ருள் முத்துமணியே

பிள்ளைகளை விட்டகன்ருள் முத்துமணியே—சிவ
பெருமா னுலகுபெற்ருள் முத்துமணியே

தள்ளருஞ்செல் வத்திருந்த முத்துமணியே—சிவன்
ருளிணையைப் பெற்றுகந்த முத்துமணியே

நல்வழியி லேயிருந்து முத்துமணியே—குரு
நாதர்பணி செய்துவந்த முத்துமணியே

கல்வி யறிவொழுக்க முத்துமணியே—பெறக்
காதலர்க்கு கந்தருள்வாய் முத்துமணியே

தாரமில்லா வில்லறந்தான் முத்துமணியே—நலஞ்
சார்கதியைத் தாராதென்று முத்துமணியே

மாரியம்மை யென்றதாயை முத்துமணியே—மண
மாலைசூட்டி வாழ்ந்திருந்தாய் முத்துமணியே

மன்னுசெல்லச் சாமிக்கு முத்துமணியே—வளர்
வயதுபதி னைந்தினுக்குள் முத்துமணியே

பன்னுசெல்வக் கல்யாணம் முத்துமணியே—செய்து
பார்த்துமகிழ் வுறவுன்னி முத்துமணியே

மதிநுதற் கருப்பாயியை முத்துமணியே—திரு
மணஞ்செய்து ளம்பூரித்தாய் முத்துமணியே

பதிவிரதை கருப்பாயியை முத்துமணியே—பெற்ற
பாவையைப்போ லேவளர்த்தாய் முத்துமணியே

பெருமையுள்ள கருப்பாயி முத்துமணியே—பெற்ற
பிள்ளைகளைக் கண்டுகந்தாய் முத்துமணியே

மருமாலே மாரியின்பால் முத்துமணியே—முத்து
மாரியப்பன் வரப்பெற்ருய் முத்துமணியே

சர்க்கரையப் பன்றனக்கு முத்துமணியே—நற்பிச்
சம்மாளே மணமுடித்தாய் முத்துமணியே

நற்குணமா ரியப்பற்கு முத்துமணியே—செல்வ
நன்மணம் புரிந்திடாமல் முத்துமணியே

மூத்தமகன் கைக்கொடுத்து முத்துமணியே—மண
முடிப்பதுன் பொறுப்பென்ருய் முத்துமணியே

காத்தருள்வ னெல்லாரையு முத்துமணியே—சிவன்
காணு மென்ரு சீர்வதித்தாய் முத்துமணியே

சிவலோகஞ் சென்றமர்ந்தாய் முத்துமணியே—யுனைச்
சேவிப்பதெக் காலமினி முத்துமணியே

கவலே யடையாதென்றும் முத்துமணியே—யெமைக்
காத்தருள் புரிவீர்புன்னே முத்துமணியே.

கண்ணிகள்.

சூட தெரிசனத்தின் சுந்தரந் தன்னேக்கண்டு
பாடினே னறியாத பாவையா வலேக்கொண்டு (சூட)

கோடி சனங்கள்வந்து கும்பிட் டடிவணங்கத்
தேடிவந்த பேர்களுக்குத் தீவினேய கற்றுந்துங்க (சூட)

புத்திர ரைக்கொடுக்குஞ் சத்தி மிகவுண்டாக்கும்
பத்தி யுடனேவந்து பணிந்தவர் களேக்காக்கும் (சூட)

சித்தி விளங்குபுன்னே முத்துக் குருசாமியின்
புத்திரி குருவம்மாள் ருத்திப் புகழ்ந்திருக்கும் (சூட)

முற்றிற்று.

